**செய்தி வெளியீடு எண்: 74/2022** **நாள்: 11.08.2022**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில்**
**75-வது சுதந்திர தின கிராமியக் கலை நிகழ்ச்சிகள்**

இந்திய சுதந்திரத்தின் 75-வது ஆண்டு விழாவை (Azadi ka Amrit Mahostav and Har Ghar Tiranga) கொண்டாடிடும் வகையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தமிழ்நாடு கிராமியக் கலைகள் வளர்ச்சி மையத்துடன் இணைந்து மதுரை கலைமாமணி தி.சோமசுந்தரம் குழுவினரின் பல்வேறு கிராமியக் கலை நிகழ்ச்சிகள் மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறுகிறது. இதில் கரகாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், காளையாட்டம், சிலம்பாட்டம், ஒயிலாட்டம், கோலாட்டம், தப்பாட்டம், மற்றும் நையாண்டி மேளம் போன்ற கிராமியக் கலை நிகழ்ச்சிகள் பின்வரும் தேதிகளில் மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறுகிறது. இந்த கிராமியக் கலை நிகழ்ச்சிகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் (இயக்கம் மற்றும் அமைப்பு) ராஜேஷ் சதிர்வேதி தொடங்கி வைக்கிறார்.

12.08.2022 (வெள்ளிக்கிழமை) புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ இரயில் நிலையத்திலும், 13.08.2022 (சனிக்கிழமை) அன்று விம்கோ நகர் மெட்ரோ இரயில் நிலையத்திலும், 14.08.2022 (ஞாயிற்றுக்கிழமை) அன்று கிண்டி கத்திப்பாரா நகர்ப்புற சதுக்கத்தில் மற்றும் 15.08.2022 (திங்கள்கிழமை) சுதந்திர தினத்தன்று அசோக் நகர் மெட்ரோ இரயில் நிலையத்திலும் மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறுகிறது.

75-வது சுதந்திர தினத்தை ஒட்டி நடைபெறும் கிராமியக் கலை நிகழ்ச்சிகளை பொதுமக்கள் கண்டு மகிழ சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. அனைவருக்கும் அனுமதி இலவசம். எனவே, மெட்ரோ இரயில் பயணியர், பொதுமக்கள் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**